# ஓர் அழைப்பாளனிடம் காணப்பட வேண்டிய அம்சங்கள்

மாணவன்: **ஹிஸ்னுர்ரஹ்மான் இப்னு பத்ஹுர்ரஹ்மான்** (ஆண்டு - 4)

அழைப்பாளர் பணி என்பது மிகவும் பொறுப்பு வாய்ந்த ஒரு பணியாகும். இந்தப் பணியில் களமிறங்கினால் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் ஏனென்றால் "உண்மையை எத்திவைக்கக் கூடிய அனைவரும் பல சோதனைகளுக்கு முகம் கொடுத்தார்கள். இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் இந்தப் பணியை மேற்கொள்ளும் போது பல இன்னல்களை சந்தித்தார்கள். அவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்ததன் பின்னால் தான் அழைப்புப் பணியில் வெற்றி கண்டார்கள். அவ்வாறு இவர்கள் அழைப்புப் பணியில் வெற்றி பெறுவதற்கு அவர்களிடம் காணப்பட்ட சில அம்சங்கள் காரணமாகும். எனவே அழைப்பாளர்கள் தம் பணியில் வெற்றி பெறுவதற்கு அந்த அம்சங்களைப் பெற்றிருத்தல் அவசியமாகும்.

* தக்வா
* அழைக்கும் விடயத்தில் அறிவைப் பெற்றிருத்தல்
* அழைக்கப்படுவோர் நிலைபற்றிய தெளிவு
* அழைக்கும் பணியில் பொறுமையைக் கைகொள்ளுதல்
* ஹிக்மத்
* அழகிய நற்பண்புகள்
* தடையைத் தகர்த்தல்
* எதிர்ப்போரையும் அரவணைத்தல்

### தக்வா

அழைப்பாளர்களிடம் காணப்பட வேண்டிய அம்சங்களில் முதலாவது அணிய வேண்டியது தக்வா எனும் அணிகலனாகும். தக்வா என்றால் "அல்லாஹ்வின் அருளை எதிர்பார்த்து அவனது வஹியின் அடிப்படையில் அவனுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதாகும்." இந்தத் தக்வா எனும் அணிகலனை அழைப்புப் பணியில் ஈடுபடக் கூடியவர்கள் அணிந்திருத்தல் வேண்டும்.

### அழைக்கும் விடயத்தில் அறிவைப் பெற்றிருத்தல்

ஒரு அழைப்பாளன் அழைக்கும் விடயம் அல்லாஹ்வின் வேதமான அல்-குர்ஆனிற்கும் நபிகளாரின் வாழ்க்கை வழிமுறையான அஸ்ஸுன்னாவிற்கும் நேர்பட்டதாக இருத்தல் வேண்டும். அல்-குர்ஆன், அஸ்ஸுன்னாவின் அறிவையும் பெற்றிருத்தல் வேண்டும். அறிவு இல்லாமல் அழைப்புப் பணியில் ஈடுபட்டால் சிலவேளை நன்மை விளைவதற்குப் பதிலாக தீமையே விளையும். மேலும் அறிவு இல்லாமல் அழைப்புப் பணி செய்வதால் சில தானும் வழிகெட்டு பிறரும் வழிகெடலாம். இன்னும் அறியாமையுடனும், ஆணவத்துடனும் கூடிய பிடிவாதமும் இணைந்து கொண்டால் அதன் விபரீதம் மிகக்கொடியதாகும். இவ்வாறே ஒவ்வொரு அழைப்பாளனும் தான் அழைக்கும் விடயத்திற்கு ஷரீஅத்தில் எந்த நிலை கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் பார்க்க வேண்டும். ஏனென்றால் ஷரீஅத்தில் ஹராமாக்கப்பட்ட ஒன்றை ஹலாலாகவும், ஹலாலாக்கப்பட்ட ஒன்றை ஹராமாகவும் கூறினால் அல்லாஹ்விடத்தில் குற்றவாளியாக கணிக்கப்படுவார்கள். எனவே நாம் அழைப்புப் பணியில் ஈடுபடக்கூடியவர்கள் அல்-குர்ஆன், அஸ்ஸுன்னாவின் அடிப்படையில் சிறந்த முறையில் ஆராய்ந்துதான் எத்திவைக்க வேண்டும்.

**அழைக்கப்படுவோர் நிலைபற்றிய தெளிவு**

நாம் அழைப்பதற்கு முனையும் நபரின் அல்லது சமூகத்தின் அறிவ திறமையை அறிந்திருத்தல் கட்டாயமாகும். நாம் அவர்களது தர்க்கரீதியான விவாத திறமையை அறிந்து அதற்குத் தயாராகாமல் அவர்களுக்கு உண்மை எத்திவைத்தால் அவர்களது திறமையால் சில வேளை உண்மைய மறைக்கப்படலாம். இவ்வாறு தர்க்கரீதியாக விவாதிக்கும் திறனை உடை அசத்தியக்காரர்களுடன் நாம் தயாராகாமல் சென்று பேசி உண்ன ஊமைப்படுத்தப்பட்டால் சத்தியத்தை வளர்க்க வேண்டியவனே அதை வெட்ட சாய்த்தவனாகிறான். எனவே அழைப்புப் பணி எனும் களத்தில் இறங்கும் ஒவ்வொ அழைப்பாளனும் அழைக்கப்படுவோனின் நிலையை உணர்ந்து தம் பணின மேற்கொள்ள வேண்டும். இதன் நிமித்தம்தான் முஆத் (ரலி) அவர்களை நபியவர்க யமன் நாட்டுக்கு அழைப்புப் பணியில் அனுப்பும் போது **"நீங்கள் வேதக்காரர்களாக ஒரு கூட்டத்தாரிடம் செல்கின்றீர்கள்"** என்று கூறி அனுப்பி வைத்தார்கள்.

**அழைக்கும் பணியில் பொறுமையை கைக்கொள்ளல்**

அழைப்பாளன் பொறுமை எனும் பெருமதியான அளப்பெரிய அணிகலன உடையவனாகத் திகழ வேண்டும். அழைப்பாளனை சடைவும், தளர்வுமின்றி த சக்திற்கேற்ப தனக்குள் கிடைக்கும் சாதனங்களைப் பயன்படுத்தி தன் பணியை தொடர வேண்டும். சடைவுகளுக்குப் பயந்து பின்வாங்கி விடவும் கூடாது. இந் பணியை தூய எண்ணத்துடன் ஏற்படும் சோதனைகளைச் சகித்துக் கொண மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் மார்க்கமான இஸ்லாத்தைத் தூய வடிவ பாதுகாக்க முயற்சிக்க வேண்டும். பரிகாரப் பணி என்பது போர்க்களம் போன்றதாகு அங்கு எதிர்ப்புக்கள், தடைகள், எதிர் வாதங்கள், முட்டுக்கட்டைகள் என்பன அவசிய ஏற்பட்டே ஆகும். எனினும் அழைப்பாளனை இத்தடைகளை பொறுமையுடன் தாள முயற்சிக்க வேண்டும்.

அல்லாஹ்வின் மார்க்கமான இந்த இஸ்லாமிய மார்க்க பிரகாரம் செய்ய போது அன்று முதல் இன்று வரை எதிர்க்கப்பட்டே வருகின்றது. இந்தத் தூ மார்க்கத்திற்காக முன்னைய நபிமார்களும், ரஸூல் மார்களும் பல இன்னல்களுக் முகங்கொடுத்தார்கள். நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவருடை சமூகத்தினரால் நெருப்புக் கிடங்கில் எறியப்பட்டார்கள். இறுதி நபியான முஹம்ம (ﷺ) அவர்கள் தனது பிரசாரப் பணியை ஆரம்பித்து முதல் பல வகையா கஷ்டங்களுக்கு முகம்கொடுத்தார்கள். அல்லாஹ்வின் கட்டளைப்படி தன இஸ்லாமிய பிரசாரத்தைப் பகிரங்கமாக மக்களுக்கு அறிவிப்பதற்காக ஸபா மலைய மேல் ஏறி மக்களை அழைத்து "தௌஹீத்" எனும் ஏக இறைக் கொள்கை எத்திவைத்த போது "இதற்காகவா நீ எங்களை அழைத்தாய் உனக்கு நா உண்டாவதாக" என அபூலஹப் கூறினான். இவற்றையெல்லாம் பொருட்படுத்தா தனத இஸ்லாமிய பிரசாரப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டார்கள். மேலு பைத்தியக்காரன், சூனியக்காரன் போன்ற அவப்பெயர்களாலும் நபிக அழைக்கப்பட்டார்கள். இவ்வாறே ஸஹாபாக்களும் கடுமையான சோதனைகளுக் முகங்கொடுத்தார்கள். சில ஸஹாபாக்கள் இஸ்லாத்திற்காகச் கொல்லப்பட்டார்க இன்னும் பலர் பல வகையான தாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள். என்றாலு இவர்கள் அனைத்துச் சோதனைகளையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டார்க இதே பிரசாரப் பணியைத் தொடர்ந்து பின்வாங்காமல் மேற்கொண்டார்க இதனால்தான் தௌஹீத் எனும் ஏக இறைக்கொள்கை வெற்றி பெற்று நாடுகளையும் சென்றடைந்தது.

## ஹிக்மத்

ஹிக்மத் என்பது ஒவ்வொன்றையும் அதற்குரிய இடத்தில் வைப்பதை குறிக்கும். ஒரு அழைப்பாளன் அல்லாஹ்வின் பாதையில் ஹிக்மத்தாகத்தா அழைக்க வேண்டும். ஹிக்மத், அழகிய உபதேசம், நல்லோருடன் நல்லவிதமா விவாதங்கள், அக்கிரமக்காரர்களுடன் விட்டுக்கொடுக்காத விவாத முறை என் நான்கு படித்தரங்களினூடாக மக்களைச் சத்திய பாதைக்கு அழைக்க வேண்டும். ஒ அழைப்பாளன் தன் பிரச்சாரத்தின் மூலம் ஒரே தடவையாக அசத்தியவாதி த கொள்கைக்கு வரவேண்டும் என்று நினைப்பது ஹிக்மத்தாக மாட்டா அல்லாஹு"தஆலாவும் நபிகளாருக்கு மக்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் சிறுக சிறுகத்தான் அல்-குர்ஆனை இறக்கிவைத்தான். அல்லாஹு"தஆலா தொழுகையையு ஹிஜ்ரத்துக்குச் சற்று முன்னதாகத்தான் கடமையாக்கினான். நபிகளாரு ஸஹாபாக்களுக்கு ஹிக்மத்தான முறையில்தான் தன் பிரசாரத்தை மேற்கொண்டார்கள். உண்மையை மறைப்பது ஹிக்மத்தாக மாட்டாது. இரகசியமா முறையில் பிரச்சாரம் செய்யவேண்டிய இடங்களில் இரகசியமாகப் பிரச்சாரம் செய் வேண்டும். பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்யவேண்டிய இடங்களில் பகிரங்கமாக செய்யவேண்டும். எனவே ஒரு அழைப்பாளன் மக்களின் நிலமைகளையும் அறிவு திறன்களையும் அறிந்துதான் ஹிக்மத்தான முறையில் பிரச்சாரம் மேற்கொள் வேண்டும்.

## அழகிய நற்பண்புகள்

ஒரு அழைப்பாளனிடம் காணப்பட வேண்டிய மற்றொரு அம்சம் அழகி நற்பண்புகள். இது அவனது பிரச்சாரம் மக்கள் மத்தியில் ஏற்றுக் கொள்வதற் அவசியம் இருக்க வேண்டியதொன்றாகும். நாம் ஒரு விடயத்தை ஒருவனுக் எத்திவைக்கும் போது அந்த விடயத்தை முதலில் நாம் எடுத்து நடக்க வேண்டு ஏனென்றால் ஒரு அழைப்பாளன் மற்றவர்களுக்கு எத்திவைக்கும் விடயத்தை அவ எடுத்து நடக்காவிட்டால் அது அவனை நரகத்தின்பால் இட்டுச் செல்லும். ஒ அழைப்பாளன் ஒரு விடயத்தை எத்திவைக்கும் போது மிகவும் தாழ்மையுட ஒழுக்கமான முறையில் நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு சிறந்த ஒழுக் நற்பண்புகளுடன் நடந்துகொண்டால்தான் தனது பிரசாரத்தின் பயனை பெற்றுக்கொள்ளலாம்.

## தடையைத் தகர்த்தல்

ஒரு அழைப்பாளன் தனக்கும் மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பை வைத்திருத்தல் வேண்டும் தனக்கும் மக்களுக்குமிடையே உள்ள தொடர்பை துண்டிப்பதற்கு வழிவகுக்கும் தடைகளைத் தகர்த்தெறிய வேண்டும். ஒ அழைப்பாளன் பாவம் செய்யக்கூடிய ஒரு சமூகத்தின் பக்கம் பிரச்சாரம் செய்வதற்கு பின்வாங்கக்கூடாது. அவ்வாறான பாவம் செய்யக்கூடிய சமூகத்தில் தான் தடைகளை தகர்த்துக்கொண்டு சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டும். எனவே ஒரு அழைப்பாள தனக்கு ஏற்படும் தடைகளைத் தகர்த்துக்கொண்டு தனது பிரச்சாரத்தை முன்னெடுத்து செல்ல வேண்டும்.

எதிர்ப்போரை அரவணைத்தல்

ஒரு அழைப்பாளன் தான் பிரச்சாரம் செய்யும் போது தோல்வியடைந்தால் அதை ஏற்றுக்கொள்ளாதவர்களை எதிரியாக எண்ணக் கூடாது. தொடர்ந்து அவர்களுக்கு ஆதாரங்களை முன்வைத்து தெளிவுபடுத்த வேண்டும். தன்னை எதிர்ப்போரை எதிர்த்து ஒதுக்கி நடக்காமல் அவர்களையும் அரவணைத்துக்கொண்டு பிரச்சாரப்பணியைச் சளைக்காமல் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

எனவே தூய மார்க்கமான இந்த இஸ்லாத்தின் தூய்மை தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காக இஸ்லாத்தைக் கற்று அதைப் பின்பற்றக்கூடிய அனைவரும் பிரச்சாரப் பணியை மேற்கொள்வதற்கு முன் வரவேண்டும். ஆகவே நாமும் தூய இஸ்லாத்தைக் கற்று ஒரு அழைப்பாளன் அணிய வேண்டிய அணிகலன்களையும் அணிந்துகொண்டு இஸ்லாமிய பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கு வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள் புரிவானாக.

---

## இதுவரை எமது கல்லூரிக்கு விஜயம் செய்துள்ள வெளிநாட்டுப் பிரமுகர்களில் சிலர்:

**அஷ்ஷைக். ஸலாஹ் அல்-புதைர்**
**(இமாம். அல்-மஸ்ஜிதுன் நபவி)**

**அஷ்ஷைக். உமர் பின் அப்துல் அஸீஸ்**
**(தலைவர். ஏவல், விலக்கல்சபை, சவூதி அரேபியா)**

**அஷ்ஷைக். முஹம்மத் மஹ்மூத் அல்-அலி**
**(இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர்)**

**அஷ்ஷைக். ஸாலிஹ் பின் அப்துல் கரீம் அஷ்ஷீஹா**
**(முன்னால் கவுன்ஸிலர், சவூதி அரேபியத் தூதரகம், இலங்கை)**

**அஷ்ஷைக். முஹம்மத் அல்-புதைஃ**
**(இஹ்யாஉத் தூராஸு ல் இஸ்லாமி, குவைத்)**

**அஷ்ஷைக். அஹ்மத் அஸ் ஸலாமா**
**(சவூதி அரேபிய செம்பிறைச் சங்கம்)**

**அஷ்ஷைக். முஹ்மத் அத்ரதூர்**
**(கடார் நலன்புரிச் சங்கம்)**